# பெண்ணியமும் மொழியும்

## புத்திஜீவித்துவ உரையாடல்கள்

# FEMINISM AND LANGUAGE

## Intellectual Dialogues

*தொகுப்பு*

**கலாநிதி எஸ்.எம்.அய்யூப்**

*தலைவர், சமூகவியல் துறை*
*கலைகலாசார பீடம்*
*இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் - ஒலுவில்*

**Excellent Publication**

**2020**

# பொருளடக்கம்

**அணிந்துரை**

**முன்னுரை**

**பெண் காழிகள் நியமனமும் இலங்கையில் அதன் அமுலாக்கத்திற்கான பரிந்துரையும்** - *செய்யித் முஹம்மத் முஹம்மத் மஸாஹிர்*

**குழந்தைகளின் மொழி விருத்தியும் நடத்தை மாறுபாடுகளும் - ஒரு குழந்தை உளவியல் ஆய்வு** - *ஐ.எல்எ.ம். மாஹிர்*

**இலங்கை முஸ்லிம் பெண்களும் ஹிஜாப்பும் : மேற்கிளம்பும் விவாதங்கள்** - *என்.லும்னா*

**மொழிசார் மொழிபெயர்ப்புச் சிக்கல்கள் : சில தெரிவுகளும் தெளிவுகளும்** - *அ.ப. முகம்மது அஷ்ரஃப்*

**பெண்ணியமும் இஸ்லாமியப் பெண்ணியம் எனும் எண்ணக்கருவும் ஓர் ஒப்பாய்வு** - *எம்.ஐ.எம்.ஜெஸீல்*

**மொழிபெயர்ப்பியல் : சில தொடக்க நிலைக் குறிப்புகள்** - *பீ.எம்.எம். இர்பான்*

**பெண்களின் பால்நிலை வகிபாகங்கள் : புத்திஜீவித்துவ உரையாடல்கள்** - *எஸ்.எம். அய்யூப்*

**குறியியல் உளப்பகுப்பாய்வும் ஜக்குவஸ் லக்கானும் - ஓர் உளவியல் பகுப்பாய்வு** - *கலாநிதி. ஐ.எல்எம். மாஹிர்*

**பிரயோகச் சமூகவியலும் அதன் பயன்பாடும்** - *எம். றிஸ்வான்*

**தமிழர் கல்விப்பாரம்பரியம் - திருமூலரையும் திருவள்ளுவரையும் மையப்படுத்திய ஓர் ஒப்பீட்டாய்வு** - *கே.கணேசராஜா*

**மலையக தோட்டத் தொழிலாளர்களின் வரவும் அவர்கள் எதிர்கொண்ட ஆரம்ப காலகட்டப் பிரச்சினைகளும் : மலையகக் கவிதைகளை அடிப்படையாகக் கொண்ட பார்வை** – *ஸாதியா பௌஷர்*

**ஈழத்தில் தமிழ் - சிங்கள அகராதி முயற்சிகள் : கேள்வியும் ஆக்கமும் - ஒரு மதிப்பீடு** – *அ.ப.முகம்மது அஷ்ரஃப்*

**நவீன தமிழ் இலக்கியத்தின் அழிக்க முடியாத தடங்கள்** - *எம்.ஏ.எம். றமீஸ் - எம்.ஏ.எம். பௌசர்*

# பெண்ணியமும் இஸ்லாமியப் பெண்ணியம் எனும் எண்ணக்கருவும் - ஓர் ஒப்பாய்வு

எம்.ஐ.எம்.ஜெஸீல்

## சுருக்கம்

*பெண்கள் விடுதலை, பால்நிலை சமத்துவம், பெண் உரிமைகள், மற்றும் முன்னேற்றம் பற்றிய கருத்தியலும் இயக்கமும் பெண்ணியம் உருவாக்கத்துக்கு வழிசெய்துள்ளது. பெண்ணியம் வளர்ச்சிப் போக்கில் ஏற்பட்ட வேறுபட்ட பரிமானங்களை அடிப்படையிலான அடையாளப் போக்குகளையும் (tendencies) அது பெற்றுள்ளது. இஸ்லாமிய பெண்ணியம் எனும் எண்ணக்கரு அவற்றுள் குறிப் பிடத்தக்கது. பெண்ணியம் மற்றும் இஸ்லாமியப் பெண்ணியம் தொடர்பான இலக்கியங்களை, எழுத்துக்களை மீளாய்வுக்கு உட்படுத்தி, பாரம்பரிய, மதச்சார்பின்மை பெண்ணியத்திலிருந்து இஸ்லாமியப் பெண்ணியத்தை வேறுபடுத்தி, வரைவிலக்கணப் படுத்தும் முனைவுகளை இக்கட்டுரை பகுப்பாய்கின்றது. பொது பெண்ணிய சிந்தனையின் தாக்குறவுக்கு உட்பட்டு, மத்திய கிழக்கின் பிரத்தியோகமான சூழலமைவில் இஸ்லாமியப் பெண்ணியம் தோற்றம்பெற்றது. எனவே அதன் பதப்பிரயோகத்தில் இஸ்லாமியம் ஒரு குறியீட்டு அடையாளமாகவே (labeling) பெரிதும் கொள்ளப்படுகிறது. இந்நிலையில் இஸ்லாமியப் பெண்ணியத்தின் வரையறைகள், அடிப்படைகள் பற்றிய கருத்தாக்கமும், வாதங்களும் அறுதிசெய்யப்படாமல் தொடர்கின்றன. இருந்தபோதிலும் பெண் விடுதலை, முன்னேற்றம் பற்றி பெண்ணிய சிந்தனையை இஸ்லாம் அதன் மூல ஆவணமான அல்-குர்ஆன் பாற்பட்ட உரையாடலாக கட்டமைக்க விழைகிறது இஸ்லாமியப் பெண்ணியம். ஆயினும் மதச்சார்பின்மை பெண்ணியவாதிகள், விசுவாச பெண்ணியக்கவாதிகள், பாரம்பரிய இஸ்லாமியவாதிகள்*

*என பல்வேறு தரப்பினர் இஸ்லாமிய பெண்ணியம் எனும் எண்ணக் கருவின் ஏற்புநிலை மீது காத்திரமான விமர்சனங்களை தொடுத் துள்ளனர். பெண்கள் பற்றிய விவகாரங்கள் ஆய்வாளர்களின் கவனத்தை பெரிதும் ஈர்த்துள்ள இன்றைய சூழலில் இக்கட்டுரை பெண்கள் பற்றிய கல்வி சார் உரையாடலை மேலும் வளப்படுத்த வல்லது.*

**பிரதான சொற்கள் :** *பெண்ணியம், இஸ்லாமிய பெண்ணியம், பாலினம்*

## அறிமுகம்

*மனித இனத்தின் அரைவாசிப் பகுதியான பெண்கள் பற்றி கரிசனை, கருத்தாடல்கள் ஏற்படுத்திய விளிப்புணர்ச்சியே உலகளாவிய ரீதியில் பெண்ணியம் உருவாக்கத்துக்கு ஏதுவாகியுள்ளது. பெண்கள் தமது குடும்பம், தாம் வேலை செய்யும் இடங்கள் மற்றும் தாம் வாழும் சமூகம் போன்றனவற்றில் முடக்கப்படுவதையும், சுரண்டப் படுவதையும் தடுப்பதற்காக பல வழிமுறைகளிலான முயற்சிகள் ஒரு கருத்தியல் இயக்கத்திற்கு களமாகியுள்ளன. இங்கு பெண்கள் விடுதலை, பால்நிலை சமத்துவம், பெண் உரிமைகளும், முன்னேற்றமும் உரையாடப்படுகின்றன. பெண்களின் ஜனநாயக உரிமைக்கான இத்தகைய போராட்ட வடிவமாகக் பெண்ணிலைவாதம் கருதப்படுகின்றது. இதன் விளைவாக, இஸ்லாமியப் பெண்ணியம் எனும் கருத்தாக்கம் 1990களில் தோற்றம் பெற்று, காரசாரமான வாதப்பிரதிவாதங்களை விரிவுபடுத்தியுள்ளது. ஒரு பக்கம், பெண்கள் உரிமைகள், முஸ்லிம் சமூகங்களில் அவர்களின் வகிநிலை தொடர்பான விரிவான இஸ்லாம் பாற்பட்ட உரையாடல்கள் வழியில் வாதங்கள் முன் வைக்கப்படுகின்றன. அதேவேளை, மறு பக்கம் இஸ்லாமிய எனும் அடைமொழியோடு கூடிய "இஸ்லாமிய பெண்ணியம்" எனும் சொல்லாடல் ஏற்புடையதா இல்லையா என்பது பற்றிய சர்ச்சைகளும், மறுத்தும் ஒத்தும் எழும் வாதங்களும் வலுப் பெற்றுள்ளன. பொதுவான பெண்ணியம் என்பதிலிருந்து இஸ்லாமியப் பெண்ணியம் எனும் எண்ணக்கரு வேறுபடும் தனிக்கூறுகள்,*

*அடிப்படைகள், முறைமை விவரித்து, 'இஸ்லாமிய' என்பதனை அடையாளப்படுத்தி வரைவிலக்கப்படுத்தும் முனைவுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பின்னணியில் இக்கட்டுரை பெண்ணியம், இஸ்லாமியப் பெண்ணியம் தொடர்பான இலக்கியங்களை மீளாய் வுக்கு உட்படுத்தி, அத்தகைய முனைவுகளை பகுப்பாய்கிறது.*

## பெண்ணியம் : பொருளும் நோக்கும்

*பெமினிஷம் (Feminism) எனும் ஆங்கிலப் பதம் தமிழில் பெண்ணியம் என்று வழங்கப்படுகிறது. இந்த ஆங்கிலச் சொல் பெண்ணைக் குறிக்கும் Femina என்ற இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து தோன்றியது. Feminism (பெண்ணியம்) என்ற சொல் 1890இல் இருந்து பாலின சமத்துவக் கோட்பாடுகளையும், பெண்ணுரிமைகளைப் பெறச் செயற்படும் இயக்கங்களையும் குறிக்கப் பயன்பட்டு வருகின்றது. ஆயினும் 20ம் நூற்றாண்டிலேயே இச்சொல் பெருவழக்கில் வந்தது. இதற்குத் தமிழில் பெண்ணியம், பெண்ணிலைவாதம், பெண்ணுரிமை ஏற்பு என்ற சொல் வழங்கி வருகின்றது (முத்துச் சிதம்பரம், 1995). பெண்ணியம் என்பதற்கு தரப்படும் விளக்கங்கள் இடையே வேறுபாடுகள் இருந்தாலும் அடிப்படையில் அவை பெண்ணியம் என்பதற்கு "பால்நிலை சமத்துவம் (Sexual Equality)" என்ற பொருளில் ஒன்றுபடுகின்றன. பெண் என்பவள் எந்த ஆணுக்கும் நிகரானவளே, எந்த நிலையிலும் எந்த காலத்திலும் அவள் அடக்கி வைக்கப்படக் கூடாது, தனிமைப் படுத்தி வைக்கப்படக் கூடாது, அல்லது சார்பு நிலைப்படுத்தக் கூடாது என்ற கருத்துகளை பெண்ணிய சிந்தனை எதிரொலிக்கிறது (பிரேமா, 1994).*

*உலகம் முழுவதிலும் பால் நிலைப் பாகுபாட்டின் காரணமாக குடும்பம், சமூகம், மதங்கள், அரசு போன்ற நிலைகளிலும் அடிப்படை உணவு, போசாக்கு, சுகாதார வசதிகள், கல்வி, வேலை வாய்ப்பு, சட்டம், தலைமைத்துவம், தீர்மானம் எடுக்கும் பதவிகள் போன்ற சகல அம்சங்களிலும் பெண்களுக்குப் பாரபட்சம் காட்டப்படுகின்றது. இதனை கருத்தில் ஏற்றுக்கொண்டு,*

*அந்த நிலமையை மாற்றுவதற்காகச் சிந்தித்தலும் செயற் படுத்தலும் பெண்ணிலைவாதம் ஆகும். மேலும் ஆண்கள் எந்த அளவு சமூக அமைப்பிலும், பொருளாதாரத்திலும், அரசியலிலும் ஈடுபடும் உரிமையுடையவர்களே, அந்த அளவுக்கு பெண்களுக்கும் அந்த துறைகளில் அனைத்து உரிமைகளும் வழங்கப்பட வேண்டும் என்றும் அதனடிப்படையில் சமூக அமைப்பை உருவாக்கித் தரவும் பெண்ணியம் முயலுகிறது. இதனையே சார்ட்லட் பஞ்ச் (Bunch, 1987) என்பவரின் கருத்து பிரதிபலிக்கியது. "பெண்ணியம் என்பது பெண்களின் எல்லாச் சிக்கல்களையும் புரிந்து கொண்டு, அவற்றை நீக்க முயல்வதாகும். அதன் மூலம் உலகளவில் அரசியலிலும், பண்பாட்டிலும், பொருளாதாரத்திலும், ஆன்மீகத்திலும் பெருத்த மாற்றத்தை ஏற்படுத்த முடியும்" இவர் பெண்ணியத்தை சமூகநிலை மாற்றக் கோட்பாடு எனக் கருதுகின்றார். பாலியல் ஒழுக்க நெறிமுறைக்கு உட்பட பிற அடிமைத்தளையிலிருந்து எல்லாப் பெண்களையும் விடுவித்தல் பெண்ணியம் என்பது பார்பரா ஸ்மித்தின் வாதம் (Bethel, L. & Smith, B. 1979).*

*பெண்ணியம் பற்றிய கீழ் நாடுகளின் கருத்தாக்கம் சற்று வேறுபட்ட போக்கினை காண்பிப்பதாக உள்ளது. தெற்காசிய நாடுகளில் பெண்கள் சமூகத்திலும், அலுவலகங்களிலும், வீட்டினுள்ளேயும் நசுக்கப்படுவதைப் பற்றிய விழிப்புணர்ச்சியும், அந்நிலையை மாற்றியமைக்க ஆண்களும் பெண்களும் ஓருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படும் முயற்சிகளுமாகப் பார்க்கப்படுகிறது. குடும்பத்திலும், பொது இடங்களிலும் பெண்கள் தங்களிடம் இயற்கையாக அமையப் பெற்றிருக்கும் ஆற்றல்களை வெளிப் படுத்தி வாழ்வது, தாமாகச் சிந்தித்து தற்சார்புடன் செயலாற்றுவது சமூதாயத்தில் ஆணும் பெண்ணும் பாலினப் பாகுபாடின்றி மனிதர்களாக மதிக்கப்படுவது ஆகியவற்றின் மூலம் பெறப்படும் மனித மேம்பாடே இந்நாடுகளில் பெண்ணியத்தின் நோக்கமும் கோரிக்கையுமாகும். இத்தகைய சமத்துவ சமூதாயத்தில்தான் பெண்களுக்குரிய அனைத்து உரிமைகளும் பெற்று சுதந்திரமாகவும் சுபீட்சமாகவும் வாழ முடியும் என்று பெண்ணியவாதிகள் கருதி அதற்குறிய முழு முயற்சியிலும் ஈடுபட்டு வருகின்றனர் (பிரேமா, 1994).*

*இது உலகளாவியரீதியில் பல பெண்ணிய இயக்கங்களின் செயற்பாட்டுக்கு துணை செய்துள்ளது.*

## பெண்ணியம் : தோற்றமும் வளர்ச்சியும்

*பிரதேச வேறுபாடு, போக்கு அமைவாக பெண்ணிய வரலாறு மேலை நாட்டுப் பெண்ணியம், கீழ் நாட்டுப் பெண்ணியம் என வகைப்படுத்தி நோக்கப்படுகின்றது. தனியுருமை, சமத்துவம், அரசியல் விடுதலை மற்றும் தன்னாட்சி என்வற்றை அடிப்படைக் கொள்கைகளாகக் கொண்டு தோற்றம் பெற்றது மேலைய நாட்டு பெண்ணியம். மாறாக ஏனய பிரதேச பெண்ணியம் அதன் சூழல மைவுகளை பிரதிபலிப்பாதாக உள்ளது. எடுத்துக்காட்டாக, இந்திய விடுதலைப் போரட்ட வரலாற்றோடு தொடர்புற்று இந்தியப் பெண்கள் தங்களது தனித் தன்மையினையும், சிறப்பினையும் முழு அளவில் உணர்த்துவதை நோக்காக் கொண்டு இந்தியப் பெண்ணியம் தோற்றம் பெற்றுள்ளது.*

*காலத்தினால் முந்திய மேலைநாட்டுப் பெண்ணிய இயக்கம் ஒரு நீண்ட வரலாற்றினை உடையது. இந்த இயக்கத்தின் வித்து கி.பி.1400இல் இடப்பட்டது எனப்படுகிறது. அன்று முதல் கி.பி. 1789 வரையிலான ஆண்டுகளில் இவ்வியக்கம் பின்வரும் மூன்று பரிமாண நிலைகளை அடைந்துள்ளது. பெண்கள் தங்களை அவமதிக்கும் அல்லது துன்புறுத்தும் ஆண்வர்க்கத்தை எதிர்த்து போராட நினைத்த நிலை, இரண்டாவது பாலியல் உறவு என்பது வெறும் உடற்கூற்று சம்மந்தமானது என்று மட்டும் நினைத்த உணர்வு மாறி அதை நாகரீகமாகக் கருதிய நிலை, மூன்றாவது ஆண்வர்க்கத்தின் குறுகிய மனப்பான்மையும், பாரபட்ச மனப் பான்மையையும் எதிர்த்து, பெண்களும் சமூகத்தில் உண்மை யாண அந்தஸ்த்தும் மதிப்பும் பெற வேண்டும் என்ற நோக்கு உண்டான நிலை (பிரேமா, 1994). இதுவே பெண்ணியத்தின் முதல் காலகட்டம் எனலாம்.*

*பின்னய கால கட்டத்தில் பெண்ணிய வரலாற்றில் இரு பெரும் அலைகள் தோன்றின. முதல் அலை 1830இல் அமொரிக்காவில்*

தோன்றி ஐரோப்பாவுக்கும் விரைவாகப் பரவியது. பெண்கள் வாக்குரிமை உறுதிபடுத்தப்பட்டமை இதன் பிரதான அடைவாகக் கொள்ளப்படுகிறது. 1838ஆம் ஆண்டு முதல் ஆண்களை எதிர்த்து பெண்களின் உரிமைகளை நிலைநாட்டுவதை நோக்கமாகக் கொண்ட பல பெண்கள் ஒன்றுணைந்து ஓர் இயக்கம் தொழில் படலாயிற்று. 1840இல் லண்டனில் இடம்பெற்ற "உலக அடிமை ஒலிப்பு மகாநாடு" இல் பெண்கள் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படாமை முதன் முதலில் பெண்ணியவாதிகள் வன்மையான கண்டன அறிக்கைக்கு உட்பட்டது. 1848 இல் அமொரிக்காவில் நியூயோக்கின் செனகா பால்டஸ் (Seneca Falls) என்ற இடத்தில் நடந்த மாநாடு உலகப் பெண்ணிய வரலாற்றில் ஒரு மைல்கல். திருமணமான பெண்களுக்கு சொத்தில் உரிமை, கல்வியில் பெண்களுக்கு அதிக வாய்ப்பளித்தல், தொழில், வணிகத்துறை மற்றும் வழிபடும் இடங்களில் (Church) பெண்களுக்கு வாய்ப் பளித்தல் ஆகிய மூன்று தீர்மானங்கள் இம்மாநாட்டில் மேற் கொள்ளப்பட்டன.

1869 இல் பெண்ணியச் செயற்பாட்டாளர்கள் மற்ற உரிமைகளை அடைய வாக்குரிமை இன்றியமையாதது என்று கருதி அமொரிக்கப் பெண்கள் வாக்குரிமை கோரும் சங்கம் (The American Women Suffrage Association) என்ற அமைப்பைத் தோற்றுவித்தனர். இதைத்தொடர்ந்து 1890 இல் சூசன் ஆண்டனி, எலிசபத் கேடிஸ் டாண்டன் என்ற இருவரும் தலைமையேற்ற "தேசிய பெண்கள் வாக்குரிமை அமைப்பு" இயக்கம் பெற்றது. இதன் பெண்களின் வாக்குரிமைக்காக சுமார் 50 ஆண்டுகள் தீவிரமாகப போராட்டம் 1920 இல் ஆண்டனிச் சட்டச் சீர்திருத்தம் அல்லது 19வது சட்ட சீர்திருத்தம் ($19^{th}$ Amendment) பெண்களுக்கான வாக்குரிமையை பெற்றுக்கொடுத்தது (பிரேமா, 1994). இவ்வாறே, 1903இல் வாக்குரிமை கோரும் அமைப்புக்களின் போரட்டம் இங்கிலாந்தில் வலுப்பெற்றது "பெண்களின் சோசலிச அரசியல் கூட்டமைப்பு" போன்ற இயக்கங்கள் வாக்குரிமை பெறுவது பெண்ணியத்தின் இன்றியமையாத கடமையாகும் என்று கேஷமிட்டன. முதலாம் உலகப் போரில் இங்கிலாந்து பெண்மணிகள் பெரும்பங்கின் காரணமாக 1918இல் பிரிட்டன் பாராளுமன்றத்தில் பெண்கள்

*வாக்குரிமை பற்றிய மசோதா ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆரம்பத்தில் 30 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு வாக்குரிமை அங்கீகரிக்கப்பட்டது. பினவந்த ஆண்டுகளில் 21 வயதைக் கடந்த கல்யாணமாகாத இளம் பெண்களுக்கும் வாக்குரிமை என பரிணமித்து, 1928இற்குப் பிறகே பெண்களுக்கு முழு வாக்குரிமை வழங்கப்பட்டது (Joannou, M.& Purvis, J., 1998).*

*இதன் பயனாக 1930 களில் இங்கிலாந்துப் பெண்களிடம் குறிப் பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. இக்காலப் பகுதிகளில் இங்கிலாந்தில் பெண்கள் குட்டைமுடி வைத்துக் கொண்டும், அரைக்கால் சராய் அணிந்து கொண்டும், சிகரட் பிடித்துக் கொண்டும் வீட்டை விட்டு வெளிவந்து பொதுக்காரியங்களில் ஈடுபடத் தொடங்கிவிட்டனர். காரோட்டவும் பழகிக்கொண்ட அவர்கள் ஆண்களுக்கு சமமாக நடக்கத் தொடங்கினர். அனேகப் பெண்கள் திருமணம் வேண்டாம் என்று முடிவெடுத்தனர். திருமணம் செய்துகொண்ட பெண்களும் ஆண்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கவில்லை. பிரிட்டனில் 1953 இல் ராணி எலிசபத் பதவியேற்ற பிறகு பெண்களின் இந்த நிலமை மேலும் வலுப்பெற்றது. இவரது ஆட்சியில் உழைக்கும் வர்க்கத்தினரின் குடும்பங்களில் ஆண், பெண் இரு சாராரும் வேலைக்குச் சென்று வருமானத்தைப் பெற்றனர். பெண்கள் தங்கள் உழைப்பால் கிடைத்த சொந்தப் பணத்தில் தங்கள் விருப்பம் போல் வெளியே சென்று வேண்டியதை வாங்கவும், செலவு செய்யவும் முற்பட்டனர் (Joannou, M.& Purvis, J., 1998). 1950 களில் அமொரிக்காவிலும், இங்கிலாந்திலும் வேலைக்குச் செல்லும் பெண்களின் எண்ணிக்கை ஏறத்தாழ ஒன்று போல் இருந்தது என்று வல்லுனர்கள் கணக்கிட்டு உரைக்கின்றனர் (பிரேமா, 1994).*

*இரண்டாவது அலை 1960இன் தொடக்கத்தில் அமொரிக்காவில் தோன்றி, உலகத்தின் பல பாகங்களுக்கும் பரவி மிகப் பாரிய பண்பாட்டுப் பாதிப்பை ஏற்படுத்தியது. இக்கால கட்டத்தில் புதிய பெண்ணிய இயக்கத்தின் விளக்கங்களும், செயற்பாடுகளும் சமூகத்தில் விழிப்புணர்வை உத்வேகப்படுத்தின. பயனாக பெண்கள் பலர் ஒடுக்கு முறையை எதிர்த்துப் போராட முன்வந்தமை*

பெண்களுக்கென ஒரு புதிய பாதையைத் திறந்து வைத்தது. 1961இல் அமொரிக்காவில் ஜனாதிபதி ஜோன் எப். கெனடி நிறுவிய பெண்களின் தகுதி பற்றி ஆராய ஒரு குழுவின் பரிந்துரைக்கு அமைவாக அவர் சமசம்பள மசோதாவில் (Equal Pay Act) கையெழுத்திட்டமை அமெரிக்கப் பெண்களின் முன்னேற்றத்தில் குறிப்பிடத்தக்க ஒன்றாக அமைந்தது (பிரேமா, 1994). அமெரிக்காவைப் பொறுத்தவரை 1960 முதல் 1970 வரையிலான காலம் தீவிரவாதப் பத்தாண்டாகவும் 1970 முதல் அடுத்த பத்தாண்டுகள் பெண்கள் தசாப்தம் (Decade of Women) என்று சுட்டப்படுகின்றது. இதே காலப்பகுதிகளில் பெண்ணியம் பிரான்ஸ், ஜேர்மனி, ஹாலாந்து, இத்தாலி, ஸ்பெயின், ஆஸ்திரேலியா, ஜப்பான், மற்றும் வளர்ந்து வரும் நாடுகளிலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சி பெற்றது. பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளில் பெண்கள் சமஊதியம், சமவேலைவாய்ப்பு, கருச்சிதைவு உரிமை போன்றவற்றைப் பெற்றனர்.

1970களில் எதிர்ப்பு இயக்கங்களையும் எதிர்கொண்டு, பெண்ணியம் மேலும் சக்தி வாய்ந்த இயக்கமாக உருப்பெற்றது. ஒக்ஸ்போட்டிலுள்ள ரஸ்கின் கல்லூரியில் 1970 இல் நடைபெற்ற இங்கிலாந்து இயக்கத்தின் முதல் தேசிய கூட்டத்தில் (National Gathering of the British Movement) 600க்கும் மேற்பட்ட அமைப் புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டமை இதற்கான சான்று எனலாம். இக்கூட்டத்தில் முன்மொழியப்பட்ட செயல்முறைத் திட்டம் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டியவைகளாக பின்வரும் நான்கு கோரிக்கைகளை உள்ளடக்கி இருந்தது : அவற்றில் சம வேலையும் சமஊதியமும், சம கல்வி வாய்ப்பு, இலவச தன்விருப்ப கருத்தடையும் கருக்கலைப்பும், இலவச 24 மணிநேர குழந்தைப் பராமரிப்பு போன்றன உள்ளடக்கப்பட்டிருந்தன. அதில் முதல் இரண்டும் அதிக எதிர்ப்பின்றி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டபோதிலும் அடுத்த இரண்டு கோரிக்கைகளை நடைமுறைக்கு கொண்டுவருவதில் பல எதிர்ப்புகளும் சிக்கல்களும் எழுந்தன (பிரேமா, 1994). பாலியல் சுதந்திரத்தைப் பொறுத்தவரை இக்கால பெண்ணியப் பிரிவுகள் ஆண், பெண் இருபாலாரும் உணர்வை பயமோ, பொறாமையோ, வேறுபாடோ இன்றி வெளிப்படுத்தலாம் என்று கருதின. எனவே

*பெண் ஓரினச் சேர்க்கைக் கோரிக்கைக்கு எல்லாப் பெண்ணியக் குழுக்களின் முழு ஆதரவும் கிடைக்கவில்லை. இக்காலப் பிரிவில் எழுந்த வேறுபட்ட அபிப்பிராயங்கள் பெண்ணியத்துக்குள் பல பிரிவுகளின் தோற்றத்துக்கு வழிவகுத்ததுடன் அதன் அடித்தளத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.*

*1980 களில் பெண்ணியம் உலகளவிலான இயக்கமாக உருப்பெற்ற துடன் அரசு மற்றும் வணிகச் சங்கங்கள், கல்வி நிலையங்கங்கள், தொடர்பு சாதனங்கள் போன்ற பலவகையான அமைப்புகளிலும் பெண்களின் தனியெழுச்சியை அதிகரித்தது. மகளிர் நல்வாழ்வு மையங்கள், பெண் எழுத்தாளர்கள் அமைப்பு, வேலையாட்களின் மகளிர் சங்கங்கள், மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள், மகளிர் புத்தக வெளியீட்டாளர் சங்கங்கள், சமதர்மப் பெண்கள் சங்கங்கள், தேசிய கருகலைப்பு பிரசாரக் குழு, பாலியல் வன்மறை எதிர்ப்புக் குழு, மகளிர் பாதுகாப்பு மையங்கள் என உலகெங்கிலும் பெண் களுக்கான பலவித அமைப்புக்கள் தோற்றம் பெற்றன. இத்தகைய விடுதலை அமைப்புக்களினால் பெறப்பட்ட சாதனங்களில் மகளிர் கல்வி சிறப்பிடம் பெறுகின்றது. 1977 இல் தேசிய மகளிர் கல்விக் கழகம் (National women's Studies Association) தொடங்கப்பட்டது. இது மகளிர்களுக்கு 20 ஆம் நூற்றாண்டில் கிடைத்த பெரிய வரப்பிர சாதமாகும். பெண்ணிய இயக்கத்தின் செயற்பாடுகளை மதிப்பிட்டுப் பார்க்கும் போது அது உலக அளவில் ஒரு சமூக மாற்றத்திற்கு வித்திட்ட அதேவேளை கீழை நாடுகளிலும் தமது செல்வாக்கைச் செலுத்தியுள்ளதைக் காணலாம். இதன் பயனாகப் பெண்கள் பல்வேறு துறைகளில் முன்னேற்றம் அடைவதற்கும், அதற்கான மறுமலர்ச்சிக்கும், விழிப்புணர்வுக்கும் இத்தகைய பெண்ணிய இயக்கங்களில் செயற்பாடுகள்தான் காரணம் என்றால் அது மிகையாகாது. ஆயினும் செல்வம் படைத்த அமெரிக்க மற்றும் பிரிட்டனில் உள்ள பெண்களுக்கும் மூன்றாம் உலக நாடுகளிலுள்ள பெண்களுக்கும் உள்ள பிரச்சினைகள், அவற்றின் மூலக்கூறுகள், தன்மைகள் வேறு பட்டவைகளாக அமைந்திருந்தன. முஸ்லிம் நாட்டுப் பெண்களுடைய பிரச்சினைகள், அவற்றின் தோற்றப்பாடுகள் வெளிப்படையாகவே வேறுபட்டிருந்தன.*

## பெண்ணிய வகைகள்

*பெண் விடுதலை, பெண் உரிமை என்பவற்றை பெண்ணியம் மைய இலக்காகக் கொண்டிருந்தாலும் அதன் வளர்ச்சிப் போக்கில் வேறுபட்ட அம்சங்கங்கள், அனுகுமுறைகள் ஆகியவற்றை உள்ளீர்த்துக் கொண்டுள்ளது. மேலும் இதில் இணைந்துள்ள பெண்களின் வாழ்க்கைச் சூழலுக்கும், அனுபவத்துக்கும் ஏற்ப இவ்வியக்கத்தில் பல விதமான கருத்துக்கள், போக்குகள் எழிச்சி பெற்றுள்ளமை நோக்கதக்கதாகும். அவற்றுள் தாராளப் பெண்ணியம் (Liberal Feminism), சமதர்மப் பெண்ணியம் (Socialist Feminism) தீவிரவாதப் பெண்ணியம் (Radiacal Feminism) என்பன வெகு முக்கியத்துவம் வாய்ந்தவையும் குறிப்பிடத் தக்கவையுமாகும்.*

**தாராளப் பெண்ணியம் :** *18 ஆம் நூற்றாண்டில் தொடக்கக் கால கட்டத்தில் ஏற்பட்ட தத்துவப் புரட்சி மூலமே முதன் முதலாக தாராளப் பெண்ணியத்தின் கொள்கைகள் வேர்விட ஆரம்பித்தன. இந்த நூற்றாண்டில் ஆண்களான தத்துவாதிகள் மற்றும் எழுத் தாளர்களின் கரிசனை, வாதங்கள் யாவும் ஆணினத்தின் மேம்பாடு பற்றியும், அவர்களின் விடுதலையைப்பற்றியும் மட்டுமே இருந்தன. 1790களில் பெண் தத்துவ மேதை மேரி வோல்ஸ்டோன் கிராப்ட் (Mery Wollstone Craft) என்பவர்தான் இவ்வகை பெண்ணியத்தின் தோற்றத்துக்கு வித்திட்டவராகும். சமூகத்தில் பெண்களுக்கு சம உரிமை, எல்லா நிலைகளிலும் அவர்களுக்குச் சமவாய்ப்பு, இலட்சியமாகக் கொண்ட தாராளப் பெண்ணியம் புரட்சியின்றி அரசியல், பொருளாதாரம், சட்டம் ஆகியவற்றில் மாறுதலைக் கொண்டுவர முயன்றது. அரசியலில் பெண்ணின் பங்கு, உயர்கல்வி, மக்கள் தொடர்பு ஊடகம், சமஊதியம், பாலியலில் சமபங்குநிலைமை போன்றவை தொடர்பாகவும் வாதிட்டது. ஆணாதிக்க சமூகக் கருவிகளால் உருவாக்கப்படும் ஆண் அல்லது பெண் என்ற பங்கு நிலைகள் பெண்களின் தாழ்வுநிலைக்கு காரணமாக அமைந்து விடுகின்றது. சிமோன் தெபவார் என்பவர் குறிப்பிடும் பொழுது "ஒருத்தி பெண்ணாகப் பிறப்பதில்லை: பெண்ணாக உருவாக்கப் படுகிறாள்" என்று குறிப்பிட்டுகின்றார்(பிரேமா, 19994).*

*பாலியல் வேறுபாடு இல்லாத சமூகம் உருவாக வேண்டுமானால் குழந்தைப்பருவத்திலிருந்தே ஆண், பெண் என்ற இரு நிலையும் ஒருங்கிணைய முடியும் என தாராளவாதிகள் கருத்துரைக்கின்றனர். சமஊதியம், சமகல்வி வாய்ப்பு, சமவேலைவாய்ப்பு போன்வற்றைப் பெண்களுக்குப் பெற்றுக் கொடுத்தல், பெண்களை வேறுபடுத்தக் கூடிய அத்தனை அரசியல் அமைப்பையும் ஒழித்தல், தொடர்பு சாதனங்களில் காணப்படும் பால் பேதங்களை (Sex Discrimination) ஒழித்தல், பெண்களின் பிரச்சினைகளை முழுவதுமாக அறிந்து கொள்ளுதல், தன்விருப்பக் கருக்கலைப்பு, குழந்தைப் பராமரிப்பு, தாய்மைப் பேறு மற்றும் நல்வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல், பாலியலில் பெண்களுக்கு ஏற்படுத்தப்படும் வன்மை களையும், கடுமைகளையும் கடுமையாக எதிர்த்தல், மற்றும் அதற்கான தண்டனை களைப் பெற்றுக்கொடுத்தல், பெண் ஒரு பால் சேர்க்கையினரைத் தனிமைப்படுத்தி விமர்சிப்பதைத் தடுத்தல் ஆகியன தாராளப் பெண்ணியத்தின் முக்கிய செயற்பாட்டுக் களங்களாகும் (Shukla, B.A., 2007)*

*சமதர்மப் பொண்ணியம்: சமர்தர்ம சமூதாயத்தை ஏற்படுத்த விழைந்த கம்யூனிஷவாதிகளும், மனிதஉரிமை கோரும் மார்க்சிய வாதிகளும், உழைப்பாளிகளும் இப்பெண்ணியத்திற்கு வித்திட்ட வர்களாவர். இனம் மற்றும் பால் வேறுபாட்டை ஒழிப்பதை அடிப் படை நோக்காகக்கொண்ட இப்பெண்ணியக்கத்தின் போக்கில் கம்யூனிஷ, மாக்ஷிச கொள்கைகளை இனங்காண முடியும். பெண்களின் ஒடுக்குமுறைக்கு முதலாளித்துவ பொருளாதாரம், பண்பாட்டு அடிப்படையிலான முதலாளித்துவப் போக்குக்கான அமைப்புமே காரணம் என்று சமதர்மப் பெண்ணியவாதிகள் நம்புகின்றனர். அரசியல் ஈடுபாடு, திருமணப் பந்தம், பாலியல் உறவு, குடும்பம், பிள்ளைப் பேறு என்பன பெண்களின் சொந்த விருப்பு, வெறுப்பின் பாற்பட்டது என்றும் இயற்கையின் அடிப் படைத் தேவையில் தோன்றுவது என்றும் அவர்கள் வாதிடு கின்றனர்.*

*சமர்தர்மப் பெண்ணியம் ஆண்களை நேரடி எதிரியாகக் கருத வில்லை. இருந்த போதிலும் ஆண் தந்தை வழிச் சமூக அமைப்பில்*

*தலைவனாகவும், குடும்பத் தலைவனாகவும், முதலாளியாகவும், சொத்துரிமை உடையவனாகவும், வேலை வாங்குபவனாகவும் இருப்பதால் ஆண்கள் பெண்களைவிட உயர்ந்தவர்களாகச் சமூதாயத்தில் பங்கு வகிக்கின்றனர். அதனடிப்படையில் அவர் களிடம் காணப்படும் தன்னலம் மற்றும் சுரண்டல் போக்கையும், ஆதிக்க மனப்பாண்மையையும் கண்டனத்துக்கு உட்படுத்துகிறது இவ்வகைப் பெண்ணியம். பெண்கள் பெறும் பொருளாதார விடுதலையே, சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதே இவர்களின் வாதமாகும். சீர்திருத்தப் பிரச்சாரங்களின் ஊடாக மக்களிடையே விழிப்புணர்வு, வேலை பார்க்கும் பெண்களின் முன்னேற்றம், ஊதிய பிரச்சினைகள், தொழிற்சங்கப் பிரச்சினைகள் போன்றவற்றின் தீர்வுக்காக உழைத்தல், வேலை பார்க்கும் மகளிருக்குச் சமூகப்பாதுகாப்பு ஏற்படுத்துதல், அவர்களுக்கு இலவச கருக்கலைப்பு மற்றும் எளிய கருத்தடைச் சாதனங்கள் கிடைக்க் செய்தல், பெண்களுக்கே உரிய தனிப்பட்ட பிரச்சினை களைத் தீர்த்து வைத்தல் போன்றன சமதர்மப் பெண்ணிய வாதிகளின் செயற்பாட்டு திட்ட நடவடிக்கைகளாகும் (Black, N., 2019).*

*தீவிரவாதப் பெண்ணியம்: தாராளப் பெண்ணியத்திலிருந்து விலகி வந்த தீவிர சிந்தனைப் பாங்குடைய பெண்கள் இப்பெண்ணியத்தை தேற்றுவித்தனர். 1960 களில் தங்களுக்கென்று சில அமைப்புக் களைத் தோற்றுவித்து பெண்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து, ஆண் ஒதுக்கப்பட வேண்டியவன் என்றும் திருமணம், கட்டயாக் குடும்ப அமைப்பு, தாய்மைப் பேறு போன்றன பெண்களின் அடிமைத்தனத்துக்கு வித்திட்டுள்ளது என்றும் அவை அடியோடு ஒழிக்கப்பட வேண்டும் என்று வாதிட்டனர். தந்தை வழிச் சமூகம், குடும்ப அமைப்பு, பாலியல், பெண்களின் வரலாறு போன்றனவற்றை முக்கிய கொள்கைகளாக கருதும் தீவிரவாதப் பெண்ணியம் ஆண்களின் மேலாண்மைக்கு பெண்களின் உடற்கூற்றில் அமைந்துள்ள வேறுபாடே காரணமாகும் என்கின்றனர். பெண்கள் தங்களின் உடல் கூற்றின் அமைப்பினாலேயே ஒரு விதத்தில் ஊனப்படுத்தப்பட்டவர்கள். ஏனெனில் அவர்கள் மட்டுமே தாய்மை அடைந்து பிள்ளைப் பேற்றின் சகல கஷ்டங்களையும்*

*அனுபவிக்க வேண்டியுள்ளது. எனவே பெண்களைப் பொறுத்த வரை தாய்மை என்பது காட்டு மிராண்டித்தனமானது என்று வாதிடுகின்றார் தீவிரப் பெண்ணியவாதியான சுலாமித் பயர் ஸ்டோன்.*

*பெண்கள் தம் உடலிலிருந்து பிள்ளைப் பெறுவதைத் தவிர்த்தல் மற்றும் பாலுறவு கொள்ளுதலையும், குழந்தை பெறுதலையும் விட்டுவிடுதல் ஆகிய இரண்டு புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்பட்டால் தான் ஒரு பெண், ஆணுக்கு நிகரான நிலையை அடைய முடியும் என்கின்றனர் இவ்வகைப் பெண்ணிலைவாதிகள். பாலுறவு அல்லது பாலியல் ஈடுபாடு என்பது ஆணையும் பெண்ணையும் உடல்வழி இணைக்கும் பாலம் என்றாலும் அதுவே ஆண், பெண் இருவருக்கும் முரண்பாடுகளை உருவாக்கும் இடமாகவும் அமைந்துள்ளது. எனவே பாலியல் விடுதலையே தனிக்குடும்ப அமைப்பில் திருமணத்தினால் ஏற்படும் கட்டாய உடலுறவுக்கு ஒரு முடிவுகட்டும் என்கின்றனர்.*

*நடைமுறையிலிருக்கும் ஆணாதிக்கப் போக்கிற்கு எதிரான பண்பாட்டை (Counter-Culture) கடைப்பிடித்தல், தந்தை வழிச் சமூகப் போக்கு, அதிகாரப் படிநிலை அமைப்பு என்ற மேலா திக்கப் போக்குகளைப் புறக்கணித்தல், எதிர்வு செயற்பாடுகள் (Zap Actipn) என்று சொல்லக் கூடிய நூதன போராட்ட முறையைக் கையாண்டு தங்கள் கொள்கையினைப் பரப்புதல், கருக்கலைப்பு, இருபொருள் இலக்கிய எதிர்ப்பு அல்லது ஓரினச் சேர்க்கை உரிமை, கட்டுப்படா உரிமை (Gay Right) போன்ற கொள்கைகளைப் பரப்புதல், தனியாகவோ அல்லது பிற பெண்களோடு சேர்ந்தோ வாழ்வது என்பதனை ஊக்கப்படுத்துல் போன்றன தீவிர வாதப் பெண்ணியவாதிகளின் செயற்பாடுகள். இவர்கள் தங்களுக் கென்று நல்வாழ்வு மையம், பத்திரிகைகள், புத்தகக் கடைகள், உணவகங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், பள்ளிகள், பாதுகாப்பு மையங்கள் போன்றவற்றை ஏற்படுத்திக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர் (Crow, B.A., 2000).*

## முஸ்லிம்கள் இடையே பெண்ணியத்தின் செல்வாக்கு

*முஸ்லிம்களும் முஸ்லிம் நாடுகளும் மேற்சொன்ன பெண்ணிய சிந்தனைகளின் செல்வாக்கிலிருந்து விதிவிலக்கு பெறவில்லை. 19ஆம் நூற்றாண்டில் அவர்கள் இடையே இச்சிந்தனையினால் கவரப்பட்ட அறிஞர்கள் குழாமும், பெண்ணிய இயக்கங்களும் தேற்றம் பெற்றுள்ளன. "இந்தப் பெண்ணிலைவாதப் பிரியர்கள் பெண்கள் விடுதலை, பெண்கள் முன்னேற்றம், பெண்கள் உரிமைகள் என்று எல்லாம் போர் முரசு கொட்டும் மேற்கத்தையப் பெண்களை போன்று நமது பெண்களும் எவ்வித கட்டுப்பாடும் இன்றி கட்டவிழ்த்து விடப்பட வேண்டும் என்று வாதிட்டு வருகிறார்கள்" எனும் மரியம் ஜெமீலாவின் காட்டமான விமர்சனம் முஸ்லிம்கள் இடையே பெண்ணியவாத சிந்தனையின் செல்வாக்கின் நீட்சியை காண்பிக்கவல்லது (முபாரக்,1990). முஸ்லிம்கள் மீதான பெண்ணியச் செல்வாக்குகளை 'முஸ்லிம் பெண்ணியமும் பெண்ணிய இயக்கமும்" எனும் தொடர் ஆக்கத் தொகுதிகள் விரிவாக அலசுகின்றன (Samiuddin, A., Khanam, R., 2002)*

*19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்திலும் இடம்பெற்ற நிகழ்வுகள் மத்திய கிழக்கில் அரசியல், சமூக, பண்பாட்டுத் தளங்களில் மாற்றங்களை தோற்று வித்துள்ளன. முஸ்லிம் உலகு மீதான நவீனத்தவத்தின் செல்வாக்கு, துருக்கியில் இடம்பெற்ற தன்ஸீமாத் சீர்திருத்தங்கள், ஈரானில் அரசியல் இயக்கங்கள் சமயம் நவீனத்துவம் பற்றிய விவாதத்தில் ஈடுபட்டமை, நவீனத்துவ பான்மையில் முகம்மது அப்துஹு தலைமையிலான இஸ்லாமிய புனருத்தான இயக்க சிந்தனையின் செலவாக்கும் சமய ஆவணங்கள் மீது சுதந்திரமான பகுத்தறிவு விசாரணை இஜ்திஹாதுக்கான அழைப்பும், அறிவு மற்றும் பண்பாட்டு புத்தெழுச்சிக்கு தோற்றுவிக்க முனைந்த அறபு எழுச்சி நஹ்லா இயக்கத்தின் செயற்பாடுகள், தேசிய அடையாளங்கள் மற்றும் பண்பாட்டுத் தனித்துவத்தை வலியுறுத்திய தேசிய இயக்கப் போராட்டங்கள், அச்சு இயந்திரங்களின் அறிமுகம், பத்திரிக்கை துறையின் பயன்பாடு என்பன அவற்றுள் குறிப்பிடத்தக்கவை.*

மேலும் முஸ்லிம் நாடுகளின் பிரத்தியேக பின்புலமும் முஸ்லிம் பெண்களின் மத்தியில் பெண்ணியம் உருவாக்கத்துக்கு காரணமாகியது.

குறித்த முஸ்லிம் பிரதேசம் அல்லது சமூகம் மீது நிகழ்ந்த நவீனத்துவ மயமாக்கல், நகரமயமாக்கல், குடியேற்றமயமாதல், ஏகாதிபத்திய மாதல், தேசிய சுதந்திர இயக்கமயமாதல், மற்றும் ஜனநாயகமய மாக்கல் என்பன பெண்ணியம் பற்றிய கருத்துகள் வெளித்தோன்ற வாய்ப்பளித்துள்ளன. சுதந்திர அரசுகளில் சுதந்திர முஸ்லிம் பெண்ணிய அமைப்புக்கள் கருத்துச் சுதந்திரத்தை அனுமதித்துள்ளன. அடக்கு முறை அரசுகளின் கீழிருக்கும்போது அவை தங்களின் பெண்ணிய செயற்பாடுகளை மறைமுகமாகப் முன்னெடுத்து வந்துள்ளன. குறிப்பாக மத்திய, உயர்தர வர்க்கத்தினைச் சேர்ந்த கற்றறிந்த முஸ்லிம் பெண்கள் பெரிதும் ஈர்க்கப்பட்டு, பல்வகையான பெண்ணிலை வாத பிரசாரங்கங்களையும் இயக்கங்களையும் முன்னெடுத்துள்ளனர்.

19 ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியில் சமமற்ற கட்டமைப்பை உடைய பால்நிலை வேறுபாடு பற்றியும், பெண்கள் மீது ஆண்கள் செலுத்தும் ஆதிக்கம் பற்றியும் சில முஸ்லிம் பெண்கள் உரை யாடலை நிகழ்தினர். பெண்ணியம் பற்றிய முஸ்லிம் பெண்களின் கருத்தாக்கத்தின் உள்ளடக்கம் பின்வருவனவற்றை பிரதிபலிக் கின்றது. பால் ரீதியாக அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள கட்டாயக் கடமைகள் பற்றிய அறிவு, தங்களின் பலவீனம் பற்றிய நிராகரிப்பு, பால் ரீதியான சம அந்தஸ்துக்கொண்ட அமைப்பு உருவாக்கும் முயற்சிகள், அவ்வமைப்பே இரண்டு பாலாருக்கும் இடையில் மிக நல்ல உறவை பேணமுடியும் எனும் வாதம், பெண்கள் முன்னேற்றம் தொடர்பாக ஏற்பாடு போன்றன பிரதானமானவை. மேலும் முஸ்லிம் பெண்ணிலைவாதிகள் ஆண், பெண் என்ற இரண்டு மனித இனமும் சமனானது என்பதை வலியுறுத்துவதோடு, குடும்ப வட்டத்தில் இருவரதும் “சம பங்கு அவசியம் என்பதையும் பெரும்பாலும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

19 ஆம் நூற்றாண்டின் இறுதி முதல் 20ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதிவரை மத்திய, உயர்தரவர்க்கப் பெண்கள் வீட்டில்

அடைக்கப்பட்டு வைத்திருப்பதை, முகத்தை மூடுவதை, முக்காடிடுவதை எதிர்ப்பதாகவும் பெண்களின் எழுத்தறிவையும், கல்வியையும் வளர்ப்பதற்காக பகிரங்க அழைப்பு விடுப்பதாகவும் முஸ்லிம் பெண்ணிலைவாதிகளின் வெளிப்பாடுகள் அமைந்திருந்தது. எகிப்திய கவிதையாளரும், எழுத்தாளருமான ஆயிதை முறியா, லெபனான் எழுத்தாளரான சைனப் பவ்வாஸ் ஆகியோர் வீட்டில் தனிமைப்படுத்தி, சிறைப்பட்டிருந்த பெண்களுடன் தொடர்பு கொண்டு அவர்களதும், தமதும் தனிமைச் சிறையை உடைத்தெறிந்தனர். இவ்வாறே இந்தியாவைச் சேர்ந்த நொகியா சக்காவாட் ஹுசைன் என்பவர் சந்நியாசி மடத்தில் வாழ்வை ஒத்து பெண்கள் வீட்டில் வாழ்வதை எதிர்த்து ஒரு விவரணத்தில் கண்டித்து எழுதியதன் மூலம் அந்நிலையை மாற்றிமைத்தார், அதே நாட்டைச் சேர்ந்த நசார் சஸாத் கைதர் என்பவர் குறுங்கதை, நாவல், கட்டுரைகள் மூலம் பெண்கள் வீட்டில் சிறைவைக்கப்படுவதற்கு எதிராக கருத்துரைத்தார். ஜாவாவைச் சேர்ந்த ராதன் அட்ஜெங்கட்டினி, சன்சிபாரைச் சேர்ந்த எமிலிரூட், ஈரானைச் சேர்ந்த தாஜ் இல்சுல்தானா, எகிப்தைச் சேர்ந்த ஹுதா ஸராபி, நபவிய்யா மூஸா, துருக்கியைக் சேர்ந்த பாத்மீ ஆலியா, எகிப்தைச் சேர்ந்த மலக் ஹிப்னி, நாஸிப் ஆகியோர் பெண்ணிய சிந்தனை பொதிந்த புதிய வடிவிலான பெண் கல்வி, வேலை வாய்ப்பு என்பவற்றைத் தாங்கிவரும் கட்டுரைகள் அடங்கிய பிரசுரங்களை வெளியிட்டுள்ளனர்.

20ம் நூற்றாண்டின் பிந்திய பகுதியில் முஸ்லிம்களிடம் பெண்ணிய கருத்துகளின் தாக்கத்தினை அவர்களின் எழுத்துகள் பிரதிபலிக்கின்றன. பொது வாழ்வில் மத்திய, உயர் தரப் பெண்கள் ஈடுபட்டு, சமூகத்துடன் ஒன்றிணைந்த நிலையில் குடும்பத்திலும் சமூகத்திலும் ஆண் பெண்ணின் பங்கு யாது என்பது பற்றிய எழுத்துக்களை அவர்கள் தந்துள்ளனர். மேலும் பாலியல் வல்லுறவு, துர்நடத்தை, பெண்கள் வெறுப்பு மற்றும் தந்தை வழித் தலைமைத்துவம் பற்றியும் ஏகாதிபத்திய அடக்குமுறையுடன் இணைந்து, பெண்கள் வகுப்பு ரீதியாகவும், பால் ரீதியாகவும் நசுக்கப்படுவதைப் பற்றியும் அவர்கள் எழுதினர். எகிப்திய மருத்துவரும் சமூகப் செயற்பாட்டாளருமான நவால் அல்-சதாவி என்பவர் சமூகப், பொருளாதார,

பாலுணர்வு, உளவியல் ரீதியான பிரசுரங்களையும், கட்டுரை களையும் வெளியிட்டார். மொறோக்கோ நாட்டின் பாத்திமா மெர்னிஸ் சமூக, வரலாறு சம்மந்தமான ஆக்கங்களை வெளியிட்ட அதே வேளை பாக்கிஸ்தானைச் சேர்ந்த ரிபாட் ஹசனுடன் மதம் சம்மந்த மான விடயங்களுக்கு விளக்கமளிக்கும் செயற்பாடு களையும் உருவாக்கியுள்ளார். அல்-ஜீரியாவின் அஸியா ஜேபர் தனது நாவல் இலக்கியத்திலும் கட்டுரைகளிலும் பெண்கள் நசுக்கப்படுவது பற்றியும், தந்தை வழித் தலைமைத்துவத்தின் கீழ் பெண்ணுக்கு ஏற்படும் இடையூறு பற்றியும் வெளிக் கொணர்ந்தார். பெண்கள் தங்கள் உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் அனுப விக்கும் சிக்கல்களை தனது கவிதையின் கருப்பொருளாக்கி சொல்லிக் காட்டியுள்ளார். இவை தவிர, ஈரானைச் சேர்ந்த புராக் பாரூக்ஸட். லெபனான் ஹுதாறமனி, சவுதி அரேபியாவின் பௌசிய அரபு காலித் போன்றவர்களும் செய்கைமுறை செயற்திட்டம் மூலம் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

20 ஆம் நூற்றாண்டில் பெருவாரியான பெண்ணிய அமைப்புகளும், இயக்கங்களும் முஸ்லிம் நாடுகளில் பல்வேறுபட்ட இராஜ அமைப் புக்களின் கீழும், சமூக நிலைமைகளின் கீழும் தொழிற் பட்டுள்ளன. முஸ்லிம் பெண்ணியச் செயற்பாட்டாளர்கள் பிரதேச வாரியாகாவும், சர்வதேச ரீதியாகவும் தம்மை ஒத்த கருத்துடைய வர்களுடன் இணைந்து பணியாற்றும் நோக்கில் ஒப்பந்தம் செய்துள்ளனர். இதற்கு எடுத்துக்காட்டாக 1945 இல் முஸ்லிம்களாலும், கிறிஸ்தவர்களாலும் நிறுவப்பட்ட "அரேபியப் பெண்ணிலைவாத சங்கம்" காணப்படுகிறது. நவீன குடிமக்களைக் கட்டியெழுப்பும் முயற்சி, குடும்ப சட்டதிட்டங்களை மீள உருவாக்கம், பெண்களுக்கு மரியாதை, பெண்களின் உடை, நடை பாவனை களுக்கு எதிராக உள்ள நடவடிக்கைகளை எதிர்த்தல் போன்ற பல்வேறு செயற்பாடுகளை இந்த இயக்கங்கள் அமுல் படுத்தியுள்ளன. நவீன பெண் குடிமக்களின் உருவாக்கத்துக்கு உதவுவதற்கு தேவையான நடவடிக்கைகள் ஹுதா சராவி என்பவரின் தலைமையில் எகிப்திய பெண்ணியவாத ஒன்றியம் 1923இல் முன்னெடுத்தது. எகிப்திய பெண்ணிய சங்கம் (EFU) எனும் அமைப்பின் பெண்ணியம் சார்ந்த சுதந்திரமான முனைப்புகள் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட

வெளிப்பாடுகளாக உருப்பெற்றிருந்தது. அவை கல்வி, தொழில், அரசியல் ரீதியில் உரிமைகளைக் கோருதல் அத்துடன் தேகா ரோக்கியத்துக்கான உரிமை, குடும்ப சட்டத்தில் புதிய மாற்றங் களை ஏற்படுத்தல், நாட்டின் அதிரரத்துக்குள்ளான விபச் சாரத்தை ஒழித்தல் போன்றனவற்றை தழுவிக் காணப்படுகின்றன.

ஈரானில் அரசியல் இயக்கங்கள் செயற்பட்ட காலப்பகுதியில் தேசியவாத பெண்கள் ஒன்றியம் (1910), இஸபஹ்ரான் பெண்கள் அமைப்பு (1918), புரட்சிகர பெண்கள் அமைப்பு (1927), ஆகிய பெண்கள் இயக்கங்கள் பெண் முன்னேற்றததுக்கு குரல் தந்துள்ளன. 1936இல் முக்காடிடும் பழக்கத்தை தள்ளுபடி செய்யவும் நவீன மயமாக்கல் பரிந்துரைத்த தாராள சட்ட திட்டங்கள் அமையப் பெற்ற குடும்பச் சட்டம் பிரகடனப்படு வதற்கும் 1963இல் பெண்களுக்கான வாக்குரிமை வழங்கப்படு வதற்கும் பெண்ணிய இயக்கங்கள் பங்காற்றியுள்ளன. 1979இல் ஈரான் இஸ்லாமியக் குடியரசு உதயமான பின் வெளிப்படையான பெண்ணிலைவாத செயற்பாடுகள் முடிவுக்கு வந்தன. 1960இல் குவைத் சுதந்திரமடைந்து தனி அரசாக உருவாகிய போது பெண்களின் சகல அரசியல் உரிமைகளும் தேர்தல் சட்டத்தின் மூலம் பறிக்கப்பட்டன. இதற்கு எதிராக பெண்ணிலைவாதிகள் பகிரங்க எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அரசியல் உரிமைகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் பெண்கள், 'பெண் சமூக, கலாசார அமையம்', 'இளம் பெண்கள் சங்கம்' பேன்ற பல் வேறுபட்ட அமைப்புக்களை உருவாக்கி செயல்பட்டனர்.

தனியார் சட்ட மரபு தொடர்பான குடும்பவியல் சட்டதிட்டங்களை மீளப் புனரமைப்பதற்கான எகிப்திய பெண்ணிலைவாதிகளின் போராட்டம் 1920இல் கலகமாக வெடித்தது. அதற்கமைவாக 1979 ஆம் ஆண்டுவரை மேற்கொள்ளப்பட்ட சட்ட திருத்தங்கள் குறிப்பிடத்தக்கவை இல்லை. பெண்ணியல்வாதிகள் தொடர்ந்து நடாத்திய உக்கிரமான, ஐக்கியமான நடவடிக்கைகள் அடுத்து இச்சட்டம் 1985 இல் ரத்துச் செய்யப்பட்டு, முற்றிலும் திருத்தியமைக் கப்பட்ட சட்ட வடிவம் கொண்டுவரப்பட்டது. முஸ்லிம் பெண்ணிய செயற்பாடுகள் காரணமாக எகிப்தில் மட்டுமன்றி ஏனைய முஸ்லிம்

*நாடுகளிலும் தாராளமயப்படுத்தப்பட்ட குடும்ப சட்ட விதிகளைக் கொண்ட புதிய சட்டக் கோவைகள் உருவாக்கப்பட்டன. துருக் கியின் Secular Civil Code (1926), டூனிஸியாவின் Tunisian Family Law (1956), ஈரானின் Iranian Family Production Acts (1967 / 1975) போன்றவற்றை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். அல்ஜீரியாவில் 1981இல் பெண்ணியவாதிகள் குடும்ப சட்டத்திற்கு எதிராக அனைத்துப் பெண்களையும் ஒன்றுறிணைத்து மிகப் பாரிய அளவிலான ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தி அதில் தற்காலிக வெற்றியும் கண்டனர். இவ்வாறாக கடந்த 30 வருடங்களாக பெண்ணிலைவாதிகள் பெண்கள் எதிர்கொள்ளும் உடலியல் ரீதியான, உளவியல் ரீதியான பாதிப்புகளை கண்டித்து பிரச்சாரங்கள் செய்துள்ளனர்.*

*1980, 1990 களில் முஸ்லிம் பெண்ணியம் தனது செயற்தளத்துக் கான ஒரு விரிந்த அரங்கை நிறுவியிருந்தது. பாக்கிஸ்தானில் 1979இல் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஆராய்வதற்கு என பொதுநீதி மன்றம் அமைத்து, அதன் சிபாரிசின் கீழ் ஹுதூத் (Hodood) எனும் சட்டக் கோவையை இராணுவ ஆட்சியானர்கள் நிறைவேற்ற முற்பட்டனர். "கடும் குற்றங்களுக்கான கடுமையான இஸ்லாமிய சட்டங்கள்" என்ற பெயரில் பெண்களுக்கு பாரபட்ச மான முறையில் இத்தண்டனைக் கோவை அமைந்திருந்தது என்பதால் பெண்ணிலைவாதிகள் எதிர்த்தனர் எனக் கூறப்படுகிறது. 1985 இல் மலேசிய முஸ்லிம் பெண்கள் மற்ற சமயப் பெண்களுடன் இணைந்து அனைத்துப் பெண்கள் செயல் சங்கம் (All Women 's Action Society) என்னும் அமைப்பை கோலாலம்பூர், செலாங்கூர் (Selangor) ஆகிய இடங்களில் நிறுவினர். மலேசியாப் பெண்களுக்கு வீட்டில் நடைபெறும் கொடுமைகள் பற்றியே இந்த அமைப்பின் பிரதான கரிசனையாக இருந்தது. மலேசியாவில் "Sister in Islam" என்றழைக்கப்பட்ட ஒரு குழு 1991 இல் ஆரம்பிக் கப்பட்டு பெண் முன்னேற்றம் பற்றிய செயல்திட்டத்தை முன்னெடுத்தது.*

*இவ்வாறு கடுமையான சட்ட முறையைக் கொண்ட சவூதி அரேபி யாவில் பெண்கள் வாகனம் செலுத்துவதற்கான அனுமதி தொடர்பாக எதிர்ப்பு ஊர்வலங்களும் இடம் பெற்றுள்ளமையை*

*அவதானிக்க முடிகிறது. 1990இல் வளைகுடாப் போர் மூண்ட காலத்தில் மேற்கின் இராணுவம் சவூதியைப் பாதுகாக்க வந்த போது அதில் பெண்களும் படையினர் அணியில் இருந்ததால் வாகனம் செலுத்தும் உரிமை மறுக்கப்படுவதை எதிர்த்து ஓர் எதிர்ப்பு ஊர்வலம் நடத்தினர். இவ்வார்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வர்களை அரசும், மத அதிகார சபையும் கைது செய்ததோடு கடும் தண்டனைகளையும் வழங்கியது. வங்காளதேசத்தில் பெண்ணிலை வாத புரட்சிகர சிந்தனை எனும் வாதத்தின் அடிப் படையில் தஸ்லிமா நஸ்றின் தனது அபிப்பிராயங்களை தெரிவித் துள்ளார். பெண்கள் மாதவிடாய் நாட்களிலும் உடலுறவு கொள்ள முடியும், முறைகேடாகப் பிறந்தவன் (Bastard) கற்பிழந்தவள் (Unchaste women) போன்ற சொற்கள் அகராதிகளிலிருந்து நீக்கப்படல் வேண்டும், எழுத்தாளர்கள் ஒழுக்க விதிமுறைகளைக் கடைபிடிக்கத் தேவையில்லை, ஏனெனில் அவர்கள் மற்றவர்களின் முகவர்கள் (Agents of charge), பெண்கள் வீட்டையும் குழந்தை களையும் கவனித்துக்கொள்ளும் பணி அடிமைத்தனத்தின் மோச மான வடிவமாகும், ஒரு பெண் கணவனுடைய விந்தையோ அல்லது வேறு எந்த மனிதனுடைய விந்தையோ பெற்றுக்கொள்ளும் உரிமை பெற்றவள் என்பன போன்ற கருத்துக்களே அவை. இவரது கருத்துக்களை முஸ்லிம் பெண்ணிலைவாதிகள் கூட பூரணத்துவமாக ஏற்றுக் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.*

## இஸ்லாமிய பெண்ணினம் எனும் எண்ணக்கரு

*1990களில் மத்திய கிழக்கில் குறிப்பாக எகிப்து, ஈரானில் செயல்பட்ட பெண்ணிய இயக்கங்கள் இஸ்லாம், குர்ஆனின் கருத்துகளின் துணையுடன் தமது உரையாடலை கட்டமைத்து முன்னெடுத்தன. இவர்களைக் குறிக்க 'இஸ்லாமிய பெண்ணியம்' எனும் சொற்பிரயோகம் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும் இதற்கு முன்னரே, இஸ்லாமியவாதம், அரசியல் இஸ்லாம் (Political Islam) ஆகிய செயற்பாட்டுக்கு உட்பட்டிருந்த மத்திய கிழக்குப் பகுதிகளில் இஸ்லாமியப் பெண்ணியக் கருத்துகள் வேரூண்டத் தொடங்கிவிட்டன. 1970 களில் எகிப்தில் தோன்றிய*

இஸ்லாமிய இயக்கங்கள் முதல் ஒரு தசாப்தத்தின் பின் ஈரானில் நிறுவப்பட்ட இஸ்லாமியக் குடியரசை உதாரணமாகக் குறிப்பிடலாம். அன்றைய அரசு, சமூகம், மற்றும் அவற்றின் பாரம்பரிய போக்கு மீது நவீனத்துவ வாதத்தினால் உந்தப்பட்டிருந்த இஸ்லாமிய வாதம் விமர்சனக் கணைகளைத் தொடுக்க தொடங்கிவிட்டிருந்தது. 'உம்மா'[1] 'வதன்'[2] எனும் கோட்பாடுகளின் அடிப்படையில் நலிவடைந்து செல்லும் தேசங்களை மீளுருவாக்க இஸ்லாத்தை ஒரு கருத்தியல், அரசியல் வடிவாமாக இஸ்லாமியவாதிகள் காண்பிக்க தொடங்கிவிட்டிருந்தனர்.

மேலும் இஸ்லாமிய பெண்ணியக் கருத்தாக்துக்கு தூபமிட்ட பின்னணியாக பின்வருவனவற்றைக் கொள்ளமுடியும். 20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிகளில் கல்வியில் முஸ்லிம் பெண்களின் ஈடுபாடும், உயர் கற்கைகள் துறைகளுக்கு அவர்கள் உள்வாங் கப்பட்டமையும் அதிகரித்ததோடு உயர் இஸ்லாமிய கற்கை களை அவர்கள் பெறவும் தலைப்பட்டிருந்தனர். மேலும் பெண் கல்வி வளர்ச்சி பொது துறைகளில், அரச தொழில்களில் சேவை செய்யும் வாய்ப்புகளை அவர்களிடையே மேலோங்கச் செய்தும் விட்டிருந்தது. ஆயினும் நடைமுறையிலுள்ள இஸ்லாமிய குடும்பக் கட்டமைப்புக்கு அமைவாக பெண்கள் தமது குடும்பப் பொறுப் பையும், பராமரிப்பையும் சேர்த்து சுமக்குமாறு எதிர்பார்க்கப் பட்டது. முஸ்லிம் பெண்கள் பெற்றிருந்த கல்வித் தகைமை மற்றும் தொழில் அனுபவம் அவர்கள் தம் சார்பாக சிந்திக்கவும், தீர்வு பெறவும் இயலுமையை வழங்கிற்று. புதிய தகவல் தொழில் நுட்பத்தின் பரவல், பயன்பாடு விண்வெளி ஊடாக விரைவாக தகவல், கருத்து பரிமாற்றதுக்கான வாய்ப்பை வெகுவான அதிகரித்தது. இஸ்லாமியப் பெண்ணிய வாதம் தோற்றுவித்த உணர்வலைகள் அமைப்பெற்ற சில அரசுகளில் பெண்கள் உயர் பதவிகளில் நியமன வாய்ப்புக்களையும் வழங்கியிருந்தன.

குமைனிக்கு பின்னரான ஈரானில் பெண்களிடம் ஏற்பட்ட அறிவு சார் உத்வேகம் பெண்கள் விவகாரம் இஸ்லாமிய குரலாக ஒலிக்க துணைசெய்தது. தேசியவாதம் பிரதிநிதித்துவம் செய்த மதச் சார்பின்மை இஸ்லாமியவாதத்தின் கண்டனத்துக்கு உட்பட்ட

[1] உம்மா: ஒரு வரலாறு, புவியியல் எல்லையை பகிர்ந்து கொள்ளும் சமூகம் எனப்பட்டாலும் அனைத்து எல்லைகளையும் கடந்த சர்வதேச முஸ்லிம் சமூகத்தைக் குறிப்பதாக கொள்ளப்படுகிறது.

[2] வதன்: தேசம், தாய்நாடு என்பதைக் குறிக்கும் அறபுப் பதம்.

தோடு மட்டுமல்லாது *'தீன் துனியா'* எனம் இஸ்லாமிய கண்ணோக்கிலான அரசியல் அடையாளம் நிலைப்படுவதற்கான கோஷம் ஓங்கியது. மதச்சார்பின்மை தளத்திலிருந்து இஸ்லாமிய அடையாள பெண் இயக்கத்துக்கும் இது வழிகோலியது. 1994இல் இடம்பெற்ற முஸ்லிம் உலகில் சமயம், பண்பாடு, பெண்கள் மனித உரிமைகள் எனும் கருத்தரங்கு இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. இஸ்லாம் மீதான பாரம்பரியவாத பிரநிதித்துவம் பரவிக் காணப்பட்ட நிலையில், இஸ்லாமிய இயக்கங்களில் கவரப் பட்ட பெண்கள், அவற்றின் பெண் தொடர்பான செயல்திட்டங்கள் மற்றும் அடைவுகளில் அதிர்ப்தியடைந்தனர் எனப்படுகிறது. இஸ்லாமியவாதத்தின் விளைவாக நலிவு நிலையில் காணப்பட்ட தேசியவாதம், அதை சார்ந்திருந்த மதச்சார்பின்மை பெண்ணியத் தையும் பாதித்தது. இந்த நிலையில் பெண்ணியச் செயற்பாடுக்கு புதிய விளிம்பு தேவைப்பட்ட நிலையில் இஸ்லாமியப் பெண்ணிய வாதம் அதை வழங்கியதுடன், புதிய சிந்தனை மற்றும் கருவிகளையும் பெற்றுக்கொடுக்கும் நிலையிலும் இருந்தது.

மதசார்பின்மை பெண்ணியத்தோடு இஸ்லாமியப் பெண்ணியத்தை ஒப்புநோக்குகையில் இரண்டும் பெண் விடுதலை, பால்நிலை சமத்துவம், பெண் உரிமைகள், பெண் முன்னேற்றம் பற்றிய கருத்துகளை பகிர்ந்துகொண்ட இரு பெயர் தோற்றப்பாடாக கொள்ளப்படுகிறது. பெரும்பாலும் அவை இரண்டும் ஒன்றை ஒன்று சார்ந்து நிலைப்பெற்றுள்ளது எனலாம். ஆயினும் ஏற்கனவே குறிப்பிட்டது போல் பெண்ணியத்தின் வளர்ச்சிப் போக்கில் புதிய பரிமானங்கள், போக்குகளின் தோற்றம் தவிர்க்க முடியவில்லை. அந்தவகையில், மத்திய கிழக்கில் பெண்ணியம் தனித்துவங்களை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. மேற்கின் பெண்ணியம் அதன் நிகழ்ச்சி நிரலையும் அபிலாஷைகளையும் கொண்டுள்ளது எனவும் அது கருதியதுடன் அதன் மீது விமர்சனங்களையும் தொடுத்துள்ளது.

மத்திய கிழக்கில் ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்ட கால வரலாற்றைக் கொண்ட பெண்ணியம் மதச்சார்பின்மை (Secular) பெண்ணியம் மற்றும் இஸ்லாமிய பெண்ணியம் என இரு

---

[1] தீன் துன்யா: உலக வாழிவின் மேம்பாடு மற்றும் மறுமையில் ஈடேற்றம் ஆகிய இரண்டையும் இணைத்துப் பார்க்கும் இஸ்லாமியக் கண்ணோட்டம்

படிமங்களைக் கொண்டது. இரு வகை பெண்ணியங்களும் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு தாவிச் செல்லும் இரண்டு முறைகள். தேசியவாதம், இஸ்லாமிய நவீனத்துவம், மானிடம், மனித உரிமைகள், ஜனநாயகம் போன்றவற்றை உள்ளடக்கிய பல உரையாடல்களில் கட்டமைக்கப்பட்டது மதச்சார்பின்மை பெண்ணியம். அதேவேளை, அல்குர்ஆனை முக்கிய ஆவணமாக எடுத்துக்கொண்டு சமயத்தை தளமாகக் கொண்ட உரையாடலாக இஸ்லாமியப் பெண்ணியம் வெளிப்படுத்தப்படுகிறது. ‘கூறுபோட முடியாத, சமத்துவமான மானிடத்தை ஆணும் பெண்ணும் பகிர்ந்துகொள்வது என்பதல்ல மாறாக போலியான, அடையமுடியாத இருமங்கள், பிரிவுகளை தவிர்த்து நீதியின் நியமங்கள் அடிப்படையில் இரு சாராரையும் உள்ளடக்கியதான விடுதலை’ எனும் இஸ்லாமிய பெண்ணியம் பற்றிய வரைவிலக்கணம் இங்கு நோக்கத்தக்கது.

மதசச்சார்பின்மை, பெண்ணியம், தேசியம், பால்நிலை முன்னேற்றதுக்கு தேசியவாத சிந்தனையை பகிர்ந்து கொண்டு, பால்நிலை சமத்துவத்தின் தளத்தில் உலகை மாற்றியமைக்கும் கருத்துடையது. இஸ்லாமியப் பெண்ணியம் இஸ்லாம் பாற்பட்ட பெண் முன்னேற்ற உரையாடலாக கட்டமைக்க விழைகிறது. மேலும் அது மதச்சார் பின்மை பெண்ணியத்திலிருந்து கருத்துக்களை பெற்றிருந்த போதிலும் முன்னேற்றகரமான சமயசார்பான உரையாடலை தனது பிரதான உரையாடலாகவும் ஆக்கியுள்ளது. ‘இன்ஸான்’ என்பதுக்கு அமைய அனைத்து மானிடரும் தகுதிகளைத் கடந்து சமத்துவமானவர்கள் என இஸ்லாமிய பெண்ணியம் உறுதி செய்வது மதச்சார்பின்மை பெண்ணியத்தையும் தாண்டிய தீவிர கருத்துநிலையாகும். மேலும் அது சமூக நீதிக் கோட்பாட்டுக்கு ஏற்ற நடைமுறைகளையும் வலியுறுத்துகின்றது (Badran, 2005. Seedat,2013).

மதச்சார்பின்மை பெண்ணியவாதிகள் போல் சட்டத்திலும் சமூகத்திலும் பாலியல் சமத்துவத்தை ஏற்படுத்துவது இஸ்லாமிய பெண்ணியவாதிகளின் பிரதான இலக்காகும். இஸ்லாமும் அல்குர்ஆனும் வழங்கிய உரிமைகளை பெண்ணை அடையச் செய்யும் குறிக் கோள்யுடையவர்களாக இந்த பெண்ணியவாதிகள் காணப்பட்டனர்.

எனவே அவர்கள் இஸ்லாமிய அணுகல் மூலம் பால்நிலை நீதி சம்பந்தமான விவகாரங்களை கையாள்வது பற்றிய அறிவார்ந்த வாதங்களிலும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டனர். இதில் பெண்கள் அல்-குர்ஆன் மற்றும் இஸ்லாமிய ஆரம்ப வரலாற்றினை மீள் வாசிப்புக்கு உட்படுத்த முயன்றனர். பரந்தளவில் விளக்கவுரை களை (தப்ஸீர்) நடாத்தும் செயற்பாடுகள், சுதந்திரமான பகுத்தறிவு விசாரணை ஊடாக இஸ்லாமிய ஆவணங்களை அணுகுதல், பண்பாட்டு விளக்கங்கள் மற்றும் பண்பாட்டு விமர்சனம் என்பனவற்றில் ஈடுபட்டனர். நடைமுறையிலுள்ள இஸ்லாமிய சட்டமரபு (பிக்ஹ்) பெண் வெறுப்பு பாற்பட்டுள்ளது பற்றியும் கருத்தரைத்துள்ளனர். இஸ்லாமிய சட்ட மரபு பொதிந் துள்ள மானிட சமத்துவத்துக்கு புறம்பான வெளிப்பாடுகள் தெய்வீக சித்தையினால் அல்லது பின்னடைந்திருந்த சமூக முறைமையின் மூலக்கூறுகளினால் உருவானவை அல்ல, மாறாக மனித கட்டுமானங்களான இவை குர்ஆன் தரும் தெய்வீக நீதியின் அடிப்படைக்கு முரண்பட்டவை. விளக்கவுரையாளர்களின் கருத்தியல்களுக்கு ஏற்ப இஸ்லாமிய புனித வாசங்கள் பொருள்கொள்ளப்பட்டுள்ளன என்று வாதிக்கின்றனர். எனவே, இஸ்லாமிய ஆவணங்கள் மீதான புதிய விசாரணை மூலம் பெறப்படும் விளக்கங்கள் ஒரு முன்னேற்றகரமான சட்டமரபு உருவாக்கத்துக்கு அத்திவாரமாக அமையவேண்டும் என்கின்றனர்.

மாற்றத்துக்கான வாதத்தை முன்னெடுப்பதற்கும் எதிர்மறையான சிந்தனை மற்றும் நடத்தைகளை களைவதற்கும் பெண்ணுக்கு ஆதரவாக இஸ்லாத்தைப் பயன்படுத்தினர். மறைக்கப்பட்ட வரலாற்று உண்மை வெளிக்கொணர்தல் எனும் நோக்கில் வரலாற்று ஆய்வுகளை மேற்கொண்டு பிரசுரித்துள்ளனர். இஸ்லாமிய வரலாற்றில் பெண்கள் பற்றி கவனம் செலுத்தி சுயசரிதைகளை வெளியிட்டுள்ளனர். இந்தவகையில் "இஸ்லாமிய பண்பாட்டில் பெண்கள் பற்றிய கலைக்களஞ்சியம்" ஈண்டு குறிப் பிடத்தக்க ஒன்று. நாஸிரா சைன்தீன் வெளியிட்ட "திறத்தலும மறைத்தலும்" எனும் ஹிஜாப் பற்றிய நூல் குர்ஆனிய விளக்க வுரையில் பெண்ணியப் பார்வை, ஈடுபாட்டை காண்பிக்க வல்லது. இவ்வாறே "குர்ஆனும் பெண்ணும்: ஒரு பெண்ணின் பார்வையில்

*புனித வாசகத்தின் மீதான மீள்வாசிப்பு" எனும் அமீனா வதூத்தின் ஆக்கமும் அமைந்திருந்தது. மேலும் பாத்திமா மெர்நிஸ்ஸி இஸ்லாமிய பெண்ணியம் பற்றிய ஒரு முன்னோடி ஆக்கமாக கருதக்க "இஸ்லாமும் பெண்களும்: ஒரு வரலாற்று, இறையியல் விசாரணை" எனும் நூலை தந்துள்ளார். மேலும் இவர் ஹதீஸ் துறை கற்கையை மேற்கொண்டு, பெண்கள் பற்றிய நபி மொழிகள் பற்றிய திறனாய்வுகளை தந்துள்ளார். துருக்கி அன்காரா பல்கலைக்கழகத்தின் சமய கற்கைகள் பீடத்தின் ஹிதாயத் துக்ஸால் என்பவரின் கலாநிதி பட்டத்துக்கான ஆய்வும் பெண்கள் குறித்த நபிமொழிகள் பற்றிய திறானாய்வை மையப்படுத்தியது. ஈரானில் ஷஹ்லா ஷர்கத் தனது 'ஸனன்' எனும் சஞ்சிகை ஊடாக இஸ்லாமிய குடியரசின் ஒரு பிரஜை மற்றும் முஸ்லிம் எனும் அடிப்படையில் சமூக நீதியையும், பால்நிலை சமத்துவத்தையும் நிலைநாட்ட அழைப்புவிடுத்துள்ளார். எகிப்தில் நீதி மன்றங்களில் பெண்கள் நீதிபதிகளாக நியமனம் பெறுவதற்கும், அல்-அஸ்ஹர் பல்கலைக் கழகத்தின் பேராசியர் ஸுஆத் ஸாலிஹ் முப்தியாக நியமனம் பெறுவதற்கும் இஸ்லாமிய பெண்ணியத்தின் பங்களிப்பு பெறப்பட்டுள்ளது என்பது நோக்கத்தக்கது.*

*இஸ்லாமியப் பெண்ணியம் எனும் எண்ணக்கரு பல்வேறு கோணங்களில் சில தரப்பிரனரின் காத்திரமான விமர்சனங்களுக்கு உட்படுத்தப்படுகிறது. மோற்கிலும், கிழக்கிலும் மதச்சார்பின்மை அல்லது பொது பெண்ணியவாதிகள் பலர் இஸ்லாமிய பெண்ணியம் எனும் கருத்தாக்கம் ஒவ்வாத இரண்டு அம்சங்களின் கலவை என்றே கருதுகின்றனர். சமயக் கோட்பாடு அடிப்படையிலான பெண்ணியத்தை விமர்சிக்கும் முஸ்லிம் முஸ்லிமல்லாதோர் பலர் உள்ளனர். ஒரு ஆணாதிக்க சமயமான இஸ்லாம் பெண் அடி பணிதல் மீது புனித முத்திரையிடுகிறது என்று நம்பும் முஸ்லிம் பெண்ணிலைவாதிகளும் உள்ளனர். இந்நிலையில் ஈரானிய அறிஞர் ஹைய்தா மொசுக்கி இஸ்லாமிய பெண்ணியம் எனும் கருத்தை பின்வருமாறு விமர்சிக்கின்றார் "பால் படிநிலை அடிப்படையாகக் கொண்ட சமயம் ஒன்று ஆணுக்கு பெண் சமன் பால்நிலை ஜனநாகத்துக்கான போராட்டத்துக்கு அமைப்புத் திட்டமாக எவ்வாறு அமைய முடியும்" என்கிறார்.*

இஸ்லாமிய பெண்ணியம் என்பதின் அடையாளம் இன்னும் திரவ நிலை வடிவிலேயே உள்ளது. அது எது யார் பிரதிநிதிதத்துவம் செய்கின்றனர் என்ற கேள்விகள் தொடர்கதையாக நீளுகிறது. விளைவாக பல வருடகால அந்த இயக்கத்தின் வரலாற்றில் கருத்து நிலைகள் உறுதிசெய்யப்படவுமில்லை ஒருமைப்பாட்டை எட்டவுமில்லை. அதன் வர்ணம் ஓவியர் பொருத்து வேறுபடு கின்றது. பெண்ணியத்தை அடையாளப்படுத்தி வகைப்படுத்தலில் கவனம் செலுத்த வேண்டியதில்லை என ஷிபா மீர் ஹுசைன அபிப்பிராயப்படுகின்றார். 'இஸ்லாம் சார்ந்து எழும் பெண்ணிய குரல்களை ஒரு துல்லியமாக வகைக்குள் ஆக்குவதும் இஸ்லாமிய பெண்ணியவாதிகளின் வேறுபட்ட கருத்து நிலைகள் மற்றும் அனுகுமுறைகளுக்கு ஏற்ப ஒரு வரைவிலக்கணத்தை தருவதும் சிரமானதும் பெரும்பாலும் பயனற்றதுமாகும்' எனவும் அவர் எழுதுகிறார் (Mir-Hosseini, 2006).

பெண்கள் முன்னேற்றம் பற்றிய கரிசனை கொண்ட ஒரு பிரிவினர் தம்மை நம்பிக்கையாளர் பெண்களாகக் காண்கின்றனர். பால் நிலை சமத்துவம், ஆணாதிக்கம் பற்றிய தமது புரிதல் குர்ஆனிருந்தே பெறப்பட்டதாக கருதுகின்றனர். பெண்ணியத்தின் தோற்றத்துக்கு முன்னரே முஸ்லிம் பெண்கள் இத்தகைய குர்ஆனிய உரையாடல் மீளுருவாக்கத்தில் ஈடுபட்டுள்ளனர் எனவும் வாதிக்கும் அவர்கள் தம்மை பெண்ணியவாதியாக அடையாளப்படுத்திக் கொள்வதை விரும்பவில்லை. பெண்ணியவாதிகளின் விடுதலை நிலைப்பாட்டை கொண்டாடுவர்களகவும் அவர்கள் இல்லை. இத்தகையவர் களுக்கு எடுத்துக்காட்டாக சைனப் அல்-கஸ்ஸாலி அவர்களைக் கொள்ளமுடியும். 1930களில் எகிப்திய பெண்ணிய சங்கத்தில் அங்கத்தவர் இருந்த அவர் அல்-அஸ்ஹர் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய சட்ட பீடம் நடாத்திய தொடர் கருத்தரங்களில் கலந்து கொண்டதன் பின்னர் அந்த அங்கத்துவத்திலிருந்து வெளியில் வந்துவிட்டார். இஸ்லாமிய அமைப்புத் திட்டம் கீழாகவே பெண்ணின் முன்னேற்றம் பற்றிய உரையாடல் மற்றும் செயற்பாட்டை முன்னெடுப்பதில் விடாப்பிடியாக இருந்துள்ளார். இஸ்லாத்தில் பெண் பூரண விடுதலையைக் கொண்டவள் என வலியுறுத்தும் அவர் இஸ்லாத்தில் ஆணும், பெண்ணும் முற்றிலுமான

சமத்துவத்தைக் கொண்டவர்கள் என உரத்துக் கூறுகின்றார். இவ்வாறே, பேராசிரியர் ஆயிஷா அப்துர் ரஹ்மான் ஒருபோது பெண்ணிய சிந்தனையில் ஈர்க்கப்பட்டிருந்தவர். "நபித்துவத்தின் பெண்கள்" அவரின் தொடர் ஆக்கங்கள் நல்லொழுக்கம், சமூக ஈடுபாட்டில் நபித்துவ கால பெண்கள் எடுத்துக்காட்டுக்களாக திகழ்பவற்றை விரிவாக விளக்குகின்றன.

பெண்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட்ட சமூகத்தில் வாழுகின்ற பெண்கள் தங்கள் உரிமைக்காகப் போராடுவது நியாயமானதே ஆனால் அத்தகைய நிலைக்கான அவசியமே இஸ்லாத்தில் இல்லை எனக்கருதும் சிலர் பெண்கள் பற்றிய இஸ்லாத்தின் வலுவான கரிசனையை பிரஸ்தாபிக்கின்றனர். 1400 வருடங்களுக்கு முன்னரே ஜாஹிலிய சமூக அமைப்பில் நிலைபெற்றிருந்த பெண் பற்றிய நிலைகளை மாற்றியமைப்பதில் இஸ்லாம் வெற்றிகண்டது. அவர்களுக்கான உயர்ந்த அந்தஸ்த்தினையும், கௌரவத்தினையும் வழங்கியதுடன் உரிமைகளையும், கடமைகளையும், சலுகைகளையும் உறுதி செய்துவிட்டது என்பது இவர்களின் வாதம். இதனைத் தெளிவாகப் புரிந்து கொள்ளாத அறிஞர்களும், மேற்கின் சிந்தனைச் செல்வாக்கினால் கவரப்பட்டவர்களுமே முஸ்லிம் பெண்களின் உரிமைகளுக்காகப் போராடுகின்றனர் எனக் குறைகூறுகின்றனர்.

மேலும் அல்-குர்ஆனிய வாசகங்கள் போன்ற மூல ஆவணங்களின் வாசகங்கள் அவை வழங்கப்பட்ட பின்புலம் அவற்றிக்கிடையிலான இணக்கப்பாடு தொடர்பான அம்சங்களை கருத்திக்கொள்ளாது வாசிப்பது தவறான வழிநடாத்தல் மற்றும் தவறுக்கு வழிகோலும் என்றும் வாதிக்கின்றனர். இஸ்லாமியப் பெண்ணியம் என்பது மேற்கின் இறக்குமதி, அது தவறான புரிதலையும் நம்பிக்கை இழப்புக்கும் வழிவகுகின்றது என்றும் கண்டிக்கின்றனர். இந்த சொல்லாடல் பெண்ணியவாததிற்கு இஸ்லாத்தின் அல்குர்ஆனின் துணையைப் பெறும் யுக்தி என பழிந்துரைக்கின்றனர். "பெண்ணியம் ஒர் பொது மொழியை தருகிறது என்பதால் பகுப்பாய்வு காரணங் களுக்காக இஸ்லாமிய பெண்ணியம் எனும் பிரயோகத்தை தக்கவைப்பதுவும், உறுதியாக பற்றிக்கொள்வதும் அடிக்கடி மீளவும் விளக்கப்படுத்தலும் அவசியம்" எனும் பத்ரானின் (Badran, 2005) கருத்தும் இதனை உணர்த்துகிறது.

*மேற்கின் சிந்தனை, மரபுகள் போல் அன்றி, மனித வாழ்வின் அனைத்து நடவடிக்கைகளையும் தனக்குரிய களமாகவே இஸ்லாம் கொண்டுள்ளது. அதன் சட்டவியல் ஒழுங்குமுறை குறித்து பேசும் உஸூல் முறைமை முஸ்லிம்களின் அக, புற விவகாரங்கள் அனைத்து குறித்தும் கரிசனை கொண்டுள்ளது. எந்த ஒரு கருத்தும் நிறுவனமும் மரபு, வழி முறையிலான (உஸூல்) பரிசீலனையில் சித்திபெறாதுவிடத்து, அங்கிகாரமோ, சட்ட ரீதியான தகைமையோ பெறமுடியாது என்பது முஸ்லிம் சட்டத்துறை அறிஞர்களின் முடிவாகும். இவ்வாறான பரீட்சையில் சித்திபெறத் தவறும் எந்த ஒரு கருத்தும் நிறுவனமும் முஸ்லிம் சிந்தனைத் தொகுதியல் அந்நியமான அம்சங்களாகவே கொள்ளப்படும். மேலும் அந்தகைய கருத்தும் நிறுவனமும் முஸ்லிம் இயக்கு சக்திகளுடன் போதிய இசைவு காணாததாக அமைந்து, மனோவியல் அமைதியின்மைக்கு வழிவகுப்பதாக ஆகிவிடும் (Abu Sulayman, 1993). இந்த வாதம் இஸ்லாமிய பெண்ணியம் எனும் எண்ணக்கருவுக்கும் துல்லியமாக பொருந்து கிறது எனலாம். உண்மையில் பொதுவாக பெண்ணியவாதிகள் எல்லோரும் இஸ்லாமிய பெண்ணியம் என்பதின் 'இஸ்லாமிய' என்பதை ஒரு குறியீட்டுக்கான (Labelling) அடைமொழியாகவே கருதுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.*

## முடிவுரை

*பெண்ணின் விடுதலை, உரிமைகள், முன்னேற்றம் பற்றிய கரிசனையின் வெளிப்பாடான பெண்ணியவாதம் 19ஆம் 20ஆம் நூற்றாண்டுகளில் ஒரு இயக்கமாக பரிணமித்தது. பெண்ணியத்தின் வளர்ச்சிப்போக்கு ஏற்படுத்திய பன்முகத்தன்மை வேறுபட்ட தனித்துவ அடையாளங்களைக் கொண்டதாக பெண்ணியம் அழைக்கப்பட ஏதுவாயிற்று. இந்தவகையில் இஸ்லாமியப் பெண்ணியம் எனும் எண்ணக்கரு பிரதானம் பெறுகிறது. பெண்ணிய கருத்துகளுக்கான இஸ்லாத்துக்கு பாற்பட்டதாக உரையாடலாக அமைந்த இஸ்லாமியப் பெண்ணியம் அறிவார்ந்த வாதங்களை ஏற்படுத்தி, ஏற்பையையும் விமர்சனத்தையும் பெற்றுள்ளது. இஸ்லாமியப் பெண்ணியம் பல எண்ணிக்கையான பெண்களை ஈர்த்துக்கொண்டு, அதன் செய்தியை பறைசாற்றிய போதிலும் மிகப் பெரும் சமூக இயக்கமாக அது பரிணமிக்கவில்லை என்றே சொல்லமுடியும்.*

# உசாத்துணைகள்

Abu Sulayman, A.H. (1993). *Towards an Islamic Theory of International Relations: New Directions for Islamic Methodology and Thought*. International Institute of Islamic Thought (IIIT).

Badran, M. (2005). Between Secular and Islamic Feminism/s: Reflections on the Middle East and Beyond. *Journal of Middle East Women's Studies* 1(1), 6-28.

Bethel, L. & Smith, B. (1979). *Conditions: Five; the Black Women's Issue*. Verlag nicht Ermittelbar.

Bunch, C. (1987). *Passionate Politics: Feminist Theory in Action*. St. Martin's Press.

Crow, B.A. (2000). *Radical Feminism: A Documentary Reader*. NYU Press.

Joannou, M. & Purvis, J. (1998). *The Women's Suffrage Movement: New Feminist Perspectives*. Manchester University Press.

Mir-Hosseini, Ziba. (2006). Muslim Women's Quest for Equality: Between Islamic Law and Feminism. *Critical Inquiry* 32(4), 629–645.

Seedat, F. (2013). Islam, Feminism, and Islamic Feminism: Between Inadequacy and Inevitability. *Journal of Feminist Studies in Religion*, 29(2), 25-45.

Shukla, B.A. (2007). *Feminism: From Mary Wollstonecraft to Betty Friedan*. Sarup & Sons

Black, N. (2019). *Social Feminism*. Cornell University Press.

Samiuddin, A., Khanam, R., 2002. *Muslim Feminism and Feminist Movement*. Global Vision Publishing House.

*பிரேமா. ஆர். (1994). பெண்ணியம். சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.*

*முத்துச் சிதம்பரம் (1995). பெண்ணியத்தின் தோற்றமும் வளர்ச்சியும். சென்னை: தமிழ்ப் புத்தகாலயம்.*

*முபாரக்.ஏ.ஆர்.எம். (1990). இஸ்லாத்தின் பெண்களின் நிலை. இந்தியா: ஹிந்துஸ்தான் பப்ளிகேஷன்ஸ்.*